https://arimanokku.com/ UGC-CARE LISTED AND PEER REVIEWED JOURNAL
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)
19-2 April 2025

Published on 14, April-2025 ISSN: 3049-2688 (Online)

# சங்ககால மக்களின் நம்பிக்கை நெறியிலான வழிபாட்டு மரபுகள்

**முனைவர் கி. துர்காதேவி**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
வேல்ஸ் அறிவியல் தொழில்நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம்

மக்களின் வாழ்க்கையையும் நடத்தையையும் சமுதாயத்தையும் நல்வழியில் கொண்டு செல்வது சமயங்களே. எல்லாச் சமயங்களும் மனித சக்திக்கு மேம்பட்ட சக்தி ஒன்று இருப்பதை உணர்த்தி, அச்சக்தியைப் பல்வேறு முறைகளில் போற்றி வருகின்றன. அனைத்துச் சமயங்களுக்கும் அடிப்படை உணர்வாக பக்தி உணர்வே விளங்குகிறது.

பாரதியார், பக்தியினால் அடையக்கூடியவை எவையெவை என்பதைப் “பக்தியினாலே – இந்தப் பாரில் எய்திடும் மேன்மைகள் . கேளடி” என்னும் தலைப்பில்,

பக்தியி னாலே – இந்தப்
பாரினி லெய்திடும் மேன்மைகள் கேளடீ!
சித்தந் தெளியும் – இங்கு
செய்கை யனைத்திலும் செம்மை பிறந்திடும்,
வித்தைகள் சேரும் – நல்ல
வீர றுறவு கிடைக்கும், மனத்திடைத்
தத்துவ முண்டாம் – நெஞ்சிற்
சஞ்சலம் நீங்கி உறுதி விளங்கிடும்

என்கிறார். மேலும், பக்தியுடன் போற்றி நின்றால் பயம் அனைத்தும் தீரும் என்று உயிர்களுக்கு ஏற்படக் கூடிய நோய், துன்பம், மரணம், வறுமை போன்ற எல்லாப் பயங்களும் நீங்கும் என்கிறார்.

சங்க கால மக்களிடம் நம்பிக்கையின் அடிப்படையில் பல வழிபாடுகள் பின்பற்றப்பட்டன. பழைய மரத்திலே தெய்வம் வாழும், அது பயப்படத் தகுந்த தெய்வம்; கொடியோரைத் துன்புறுத்தும் என்று நம்பினர்.

கொல்லிமலையிலே பயங்கரமான பெரிய கண்களை யுடைய தெய்வம் உண்டு. அம் மலையின் மேற்குப் பாகத்திலே வணங்குவோர்க்கு நன்மை தரும் கொல்லிப் பாவை யென்னும் தெய்வமும் உண்டு என்று நம்பினர். மக்கள் காடுகாள் என்னும் தெய்வத்தை வணங்கி வந்தனர். அது சூலத்தைக் கையிலே வைத்திருக்கும் பெண் தெய்வம் சூலி என்ற பெயரும் அத் தெய்வத்திற்குண்டு. வேப்பமரத்திலே தெய்வம் குடிகொண்டிருப்பதாக நம்பினார். நள்ளிரவே பேய்கள் நடமாடும் நேரம் என்று நம்பினர்.

## இயற்கை வழிபாடு

குகைகளிலும், மரப் பொந்துகளிலும் வாழ்ந்துவந்த கற்கால மனிதர்கள் இயற்கையின் ஆற்றலைக் கண்டு பயந்து. இயற்கையை இறைவனாகக் கருதி வணங்க முயன்றனர். இயற்கை மீது அவர்கள் கொண்டிருந்த அச்சம் ஆறு, மழை, பரிதி, நிலவு போன்ற இயற்கைப் பொருள்களுக்கு இறைத்தன்மை கொடுத்து அவற்றை வழிபடத் தொடங்கினர். உருவ வழிபாட்டிற்கு ஆதாரமாகக் அமைந்த இக்கொள்கையே இயற்கை வழிபாட்டுக் கொள்கை எனப்பட்டது.

மரங்கள், ஆறுகள், காடுகள், மலைகள் இவற்றிலும் தெய்வங்கள் உறைவதாகக் கொண்டு வழிபட்டனர். ஆகாயம், காற்று, நீர், தீ, நிலமாகிய ஐம்பெரும் பூதங்களின் இயல்பை சங்ககால மக்கள் நன்கு அறிந்திரு ந்தனர். அவற்றைக் கடவுளாக வடிவம் அமைத்து வணங்கவும் செய்தனர். கடவுள் நம்பிக்கையே, இயற்கை வழிபாட்டின் அடிப்

படையில்தான் தோன்றியது எனலாம்.

## பிறை வழிபாடு

சங்க காலத்தில் நிலவினை வழிபடும் வழக்கம் இருந்தது. பிறைதொழுதல் என்னும் இயற்கை வழிபாடு இன்றும் நடைமுறையில் உள்ளது. பிறைதொழுதல் என்பது மூன்றாம் பிறைச் சந்திரனைத் தொழுதல் ஆகும். பிறைதொழுதல் பற்றிய குறிப்புகள் குறுந் தொகையில் வந்துள்ளன.

**தொழுது காண் பிறையின் தோன்றி, யாம் நுமக்கு**
**அரியம் ஆகிய காலைப்**
**பெரிய தோன்றினிர் நோகோ யானே**
(குறுந். 178)

என்னும் குறுந்தொகைப் பாடல் கன்னி மகளிர் தொழும் மூன்றாம் பிறை காண்பத ற்கு அரியது என்று கூறுகிறது. மேலும்,

**வளை உடைத்தனையது ஆகிப் பலர் தொழச்**
**செவ் வாய் வானத்து ஐயெனத் தோன்றி**
(குறுந்.307)

என்னும் குறுந்தொகைப் பாடல் மூலம் வளை உடைந்தாற் போன்று தோன்றும் பிறை கன்னி மகளிர் தொழுகைக்கு உரியது என்ற கருத்தினையும் அறியலாம்.

புறநானூற்றில் விறலி முழுமதியை வணங்கிய மையை,

**"செம்மீன் இமைக்கும் மாக விசும்பின்**
**உச்ச நின்ற உலவுமதி கண்டு**
**சில்வளை விறலியும் யானும் வல்விரைந்து**
**தொழுதன்ம"** (புறம். 60)

என்ற வரிகளால் காணலாம். திங்கள் உரோகிணியுடன் கூடிய நன்னாளில் திருமணம் செய்தனர் என்பதை,

**"அங்கண் இருவிசும்பு விளங்கத் திங்கள்**
**சகட மண்டிய துகள்தீர் கூட்டம்?"**
(அகம். 136)

என்று அகநானூறு கூறுகின்றது.

அறச்செயல்களைச் செய்வதற்குரிய நாள் பௌர்ணமி என்பதை,

**"அறுமீன் கெழீஇய**
**அறம்செய் திங்கள்"** (நற். 202)

என்று நற்றினையில் கூறப்படுகின்றது.

**முதலில் தமிழர் இறந்த முன்னோரையும், ஞாயிறு திங்கள் யானை பாம்பு முதலியவற் றையும் வழிபட்டனர். பின்னர், முன்னோர் வழிபாடும் ஞாயிற்றின் வழிபாடும் கலந்த சிவ வழிபாடாக மாறிற்று. தெய்வத்தை ஆண்வடிவிலும் பெண் வடிவிலும் அவர்கள் வழிபட்டமையால் திங்கள் வழிபாடு சக்தி வழிபாட்டில் அடங்குவதாயிற்று. யானை வழிபாடு பிள்ளையார் வழிபாடாயிற்று. யோக நெறிகள் வந்தபின் பாம்பு ஆதார சக்திக்கும் குண்டலினி சக்திக்கும் அறிகுறியா யிற்று. கருநிறமுடைய மாயோன் வழிபாடு மாயோன் வழிபாடாயிற்று. எனவே ஒரு காலத்தில் சிவன், அம்மை, திருமால், பிள்ளையார், முருகன், கதிரவன் என்ற ஆறு தெய்வங்களும் சிறந்த முறையில் வழிபடப் பட்டனர். அவர்களுக்குரிய நெறி அறுவகைச் சமய மெனப்பட்டது" என்று க்.காந்தி தமிழர் பழக்கவழக்கங்களும் நம்பிக்கைகளும்** எனும் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

இயற்கை வழிபாட்டின் எச்சங்களாகக் கிராமப்புறங்களில் இன்றும் பல நிகழ்வுகள் நிகழ்கின்றன. மழை வேண்டி யாகம் வளர்த்தல், மழை வேண்டிக் கழுதைக்குத் திருமணம் செய்வித்தல் போன்றவை குறிப்பிடத்தக்கவை.

## வெறியாட்டு

தலைமகளின் காதல் நோயை அறியாத அன்னை அவளுக்கு உண்மையாகவே ஏதோ நோய் வந்து விட்டதாக நம்புவாள் அந்நோய் நீங்க முருகனுக்குப் பூசை போடுவான் அப்பொழுது வெறியாடும் வேலன் முன்னிலையில் தலைவியின் கூந்தலில் உள்ள மலரை எடுத்துப் போட்டுத் தலைமகளின் நோய் தீரவேண்டும் என்று வேண்டிக் கொள்வாள்.

**கார்நறுங் கடம்பின் கண்ணி சூடி வேலன் வேண்ட** (நற்.34)

குறிஞ்சி நிலத்து மக்கள் முருகனை முதன்மையாக வைத்து வழிபட்டனர். முருகனை வெற்றிக் கடவுளாகவும், திறந்த வெளிகளில் சேவற் கொடியினை நட்டு வேலாட்டம் முதலியவை செய்து பூசை நடத்தினர்.

**கடம்பு கொடி யாத்து, கண்ணி சூட்டி,**
(அகம். 382)

## விரிச்சிக்கேட்டல்

நெல்லையும் திரையும் கொண்டு தெய்வத்தை வணங்கி முதிய பெண்கள் விரிச்சி கேட்பதை,

**நெய்நீர் எறிந்து விரிச்சி ஓர்க்கும் செம்முது பெண்டின் சொல்லும்"** (புறம். 280)

என்ற புறநானூற்று அடிகள் கூறுகின்றன.

தன்னைப் பிர்த்த தலைவனை நினைத்துப் புலம்பில் தலைவி கடவுள் வழிபாடு, நிமித்தம் பார்த்தல் போன்றவை செய்து என்ன பயன் என வருந்துவதாக குறுந்தொகைப் பாடல் கூறுகிறது.

**விடர் முகை அடுக்கத்து விறல் கெழு சூலிக்குக்**
**கடனும் பூணாம் கைத் நூல் யாவாம்**
**புள்ளும் ஓராம் விரிச்சியும் நில்லாம்**
(குறுந். 178)

மலைபடுகடாம் என்னும் சங்கநூல், பரிசில் பெறச் சென்ற பரிசிலர் ஒருவரைப் பரிசு பெற்ற ஒருவர் நிமித்தம் பார்த்துச் செல்வாயாக எனக் கூறுவதாக வந்துள்ளது.

## புள்நிமித்தம்

சங்ககால மக்கள் பறவைச் சகுனம் பார்ப்பதை 'புள் நிமித்தம்' என வழங்கினர்.

தலைவன், பொருள் தேடும் பொருட்டு வெளி செல்லும் போது பாலை நிலத்தில் முதிய ஆண் ஓணான்கண்டதை குறுந்தொகைப் பாடல்

**வேதின வெரிநின் ஓதி முது போத்து ஆறு**
**செல் மாக்கள் புள் கொளப் பொருந்தும்**
**சுரனே சென்றனர்** *(குறுந்.140)*

என்ற பாடல் ஆண் ஓணானைப் பார்த்துச் செல்லல் நன்னிமித்தங்களில் ஒன்றாகும் என்பதைச் சுட்டுகிறது.

### சூரற மகளிர் வழிபாடு

அச்சத்தின் காரணமாக மக்களிடையே பேய், பிசாசு, நிழற்கடவுள் முதலியவற்றில் நம்பிக்கை ஏற்பட்டது. மந்திர தந்திர முறைகளின் வளர்ச்சிக்கு மக்களின் அச்சம் பெருங் காரணமாக அமைந்தது. சூரறமகளிர் அச்சம் தரும் தெய்வமகளிர் எனக் கருதினர். பாலை நிலத்திலும் மலைநாட்டுப் பகுதியிலும் அச்சமூட்டும் கடவுளாகச் சூலி, கொற்றவை முதலிய தெய்வங்கள் வணங்கப்பட்டன.

### கொற்றவை வழிபாடு

கொற்றவை வழிபாடு மிகவும் தொன்மை வாய்ந்ததாகும். கொற்றவையை வீரக்கடவுளாகவும்வெற்றிக்கடவுளாகவும்வழிபட்டனர்.

**பாய் குழை நீலம் பகலாகத் தையினாள்**
**குவளை குழைக்காதின் கோலச் செவியின்**
**இவள் செரீஇ நான்கு விழி படைத்தாள் என்று**
**நெற்றி விழியா நிறை திலகம் இட்டாளே**
**கொற்றவை கோலம் கொண்டு ஓர் பெண்"** *(பரி. பா.10)*

என்ற வரிகளின் மூலம் கொற்றவையின் வடிவினைப் பரிபாடலில் காணலாம்.

### ஆயுத வழிபாடு

தெய்வங்களை மட்டுமின்றி அவர்களது ஆயுதங்களை வழிபடும் முறையும் இருந்து வந்தது. இந்திரனது வச்சிராயுதம், சிவனின் சூலம், முருகனின் வேல் முதலிய பல ஆயுதங்களைத் தூய்மைப்படுத்தி மலர் முதலியன சூட்டிப் பூசை செய்து வழிபட்டனர்.

### நடுகல் வழிபாடு

வீரர்களுக்கு நாட்டப்பட்ட நடுகற்களும் வழிபாட்டிற்குரியனவாகத் திகழ்ந்தன. நடுகற்களுக்குப் பூசை செய்யப்பட்டன. ஆடும். மதுவும் பலியாகத் தரப்பட்டன. காத்தவராயன், மதுரைவீரன், கருப்பண்ணன், பாவாடைராயன் போன்ற வழிபாடுகள் இவ்வகையில் வந்தவைகளேயாகும். இறந்த வீரர்களுக்கு நடுகல் வைத்து வணங்குதல் ஈமச்சடங்கில் ஒன்றாய் இருந்தது. கள், தேன் ஆகியவற்றை இறந்தவர்க்குப் படைத்து ஆடு பலியிடப்பட்டதை நடுகல் பீலி சூட்டி எனும் அகப்பாடல்வழி அறியலாம்.

### பலியிடுதல்

சங்ககால மக்கள் அச்சத்தின் காரணமாகவும், கிடைத்த வெற்றிக்கு நன்றிக்கடன் செலுத்தும் காரணத்திற்காகவும் பலி கொடுத்தல் என்ற பழக்கத்தைக் கடவுளுக்குச் செய்வதில் நம்பிக்கைக் கொண்டிருந்தனர். அவ்வாறு காணிக்கையாகச் செலுத்தப்படும் பலியிடுதலை, அவிப்பலி, நவகண்டம், தூங்குதலைக் கொடுத்தல் என அழைத்தனர்.

### அவிப்பலி

"தொல்லுயிர் வழங்கிய அவிப்பலி" எனத் தொல்காப்பியர் புறத்திணையில் கூறியுள்ளார். போரின் போது வெற்றியைத் தருமாறு வேண்டி உயிர் விடுவது அவிப்பலி எனப்படும். செஞ்சோற்றுக் கடனுக்காக மறவர்கள் வாட்போரில் தம் உயிரைக் கொடுப்பது அவிப்பலி எனப்படும் என்று புறப்பொருள் வெண்பாமாலையும் கூறியுள்ளது..

### தூங்கு தலைகொடுத்தல்

போர்க்களத்துக்கு உரிய தெய்வமாகிய கொற்றவைக்கு உயிர்பலி கொடுப்பததைத் தூங்கு தலைகொடுத்தல் என்பர். இதனை அரிந்த தலையுடன் அமர்ந்தே என்று கலிங்கத்துப்பரணி குறிப்பிட்டுள்ளது.

### ஈமச்சடங்கு

தொல்காப்பியர் இறந்தவர்களின் உடலை அடக்கம் செய்யும் முறைமையினைக் குறிப்பிட்டுள்ளார். இறந்தவர்களை வழிபடுவது என்பது பழங்காலத்தில் இருந்தே வரும் பழக்கமாகும். போரில் இறந்த வீரர்களுக்கு வீரக்கல் நட்டு அதில் அவர்களின் பெயர் களையும் செயல்வீரத்தையும் எழுதி அவர் களின் நினைவாக வணங்கி வந்தார்கள். இறந்தவர்களின் நினைவால் பெரும்பிடி, பெருஞ்சோற்றுப்பதம் போன்ற நிகழ்ச்சிகளை நடத்தி வணங்கினார்கள். புறநானூற்றுப் பாடல்கள் சில இந்நிகழ்ச்சிக்குச் சான்றாக அமைந்துள்ளன.

### கல்பதுக்கை

இறந்தவர்களின் உடல்களைத் தாழியிலிட்டுப் புதைத்த இடத்தைச் சுற்றிப் பெருங்கற்களை பதுக்கை அரணாக வைப்பதை கல் பதுக்கை என்றனர்

### நிறைவாக,

சங்க கால மக்கள் அச்சத்தின் காரண்மாக இயற்கையை வழிபடத் தொடங்கினர். பின் நம்பிக்கைகளின் அடிப்படையில் பல வழிபாடுகள் பின்பற்றப்பட்டன. அவற்றில் பல வழிபாடுகள் மரபுவழியாக இன்றளவும் பின்பற்றப்படுகின்றன.

### பார்வை நூல்கள்


- காந்தி, கி., தமிழர் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1980.
- கந்தையா ந.சி., தமிழர் பண்பாடு, காமராஜ் பதிப்பகம். சென்னை, 1966.
- பிள்ளை கே.கே.,தமிழக வரலாறு மக்களும் பண்பாடும், தமிழ்நாட்டு பாடநூல் வெளியீடு 1972.